Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 035 | செவ்வாய்க்கிழமை Tuesday | 05.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

## போட்டியிட்ட 2 தொகுதிகளிலும் த.வெ.க. தலைவர் விஜய் வெற்றி:

# தமிழகத்தில் 'தொங்கு' சட்டசபை அமைகிறது



தமிழக சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை. இந்தத் தேர்தலில் விஜய் கட்சி அதிக இடங்களில் முன்னிலை வகிக்கிறது. எனவே தமிழ்நாட்டில் 'தொங்கு' சட்டசபை அமைகிறது. இதனால் கூட்டணி ஆட்சி ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் தி.மு.க. 3–ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அரசியல் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் தபால் வாக்குகள் பிரிக்கப்பட்டு எண்ணும் பணி தொடங்கியது. இதில் தொடக்கத்தில் தி.மு.க. முன்னிலை வகித்தது. அதைத் தொடர்ந்து 8.30 மணியளவில் தி.மு.க.வை பின்னுக்குத் தள்ளி விஜயின் த.வெ.க. எழுச்சி பெற்று முதலிடம் வகித்தது.

இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பெரும்பாலான அமைச்சர்கள் தப்பவில்லை. அவர்கள் பின்னடைவை சந்தித்தனர். தபால் வாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. முதலிடம் பிடித்தது. அ.தி.மு.க. 2–ஆவது இடத்தை கைப்பற்றியது. ஆனால் தி.மு.க. 3–ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

தபால் வாக்கு எண்ணிக்கை முடிவடைந்ததும் மின்னணு வாக்கு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. இதிலும் தொடக்கத்தில் இருந்தே த.வெ.க. வேட்பாளர்கள் அதிக தொகுதிகளில் முன்னிலை வகித்தனர். அவர்களைத் தொடர்ந்து அ.தி.மு.க. 2–ஆவது இடத்தைப் பிடித்தது. அதே நேரத்தில் தி.மு.க. 3–ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

மதியம் 1 மணி நிலவரப்படி த.வெ.க. 110 தொகுதிகளில் முன்னிலை வகித்தது. அதைத் தொடர்ந்து 63 இடங்களைப் பிடித்த அ.தி.மு.க. கூட்டணி 2–வது இடத்திலும், 58 இடங்களைப் பிடித்த தி.மு.க. கூட்டணி 3–ஆவது இடத்தையும் பிடித்தன. கூட்டணியைப் பொறுத்தவரை தி.மு.க. மட்டும் 48 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. அ.தி.மு.க. 57 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. தமிழகத்தில் தற்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ள தி.மு.க. இந்தத் தேர்தலில் கடுமையான சறுக்கலைச் சந்தித்து 3–ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தனித்து ஆட்சி அமைக்க 118 தொகுதிகளில் ஒரு கட்சி வெற்றி பெற வேண்டும். ஆனால் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் யாருக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை. எனவே தொங்கு சட்டசபை அமைகிறது. இருந்தாலும் விஜயின் த.வெ.க. கட்சி அதிக இடங்களில் முன்னிலை பெற்றுள்ள நிலையில் இக்கட்சியுடன் மற்ற கட்சிகள் இணைந்து கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்பு உள்ளது.

கடந்த ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களின் மூலம் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என கணிக்கப்பட்டது.

அதே நேரத்தில் நடிகராக இருந்து அரசியலுக்கு வந்துள்ள விஜயால் அதிக அளவில் வாக்குகளைப் பிரிக்க மட்டுமே முடியும். அவரால் ஆட்சி அமைக்க முடியாது என கருதப்பட்டது. ஆனால் குழப்பமான கருத்துக்கணிப்புகளுக்கு இடையேயும் கூட்டணி அமைக்காமல் தனித்து போட்டியிட்டு விஜய் வெற்றி வாகை சூடியுள்ளார். பெரம்பூர் தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜய் 88,744 வாக்குகளைப் பெற்று, 38,927 வாக்குகள் முன்னிலையுடன் வெற்றியை உறுதி செய்துள்ளார். அந்த தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் 49,817 வாக்குகளும், பா.ம.க. வேட்பாளர் திலகபாமா 6,830 வாக்குகளும் பெற்று தோல்வி அடைந்துள்ளனர்.

அதேபோல், திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் 62,057 வாக்குகளைப் பெற்று 20,394 வாக்குகள் முன்னிலையுடன் வெற்றியை உறுதி செய்துள்ளார்.

# சென்னை கொளத்தூர் தொகுதியில் மு.க.ஸ்டாலின் தோல்வி



தமிழகத்தில் கடந்த மாதம் 23–ந் தேதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணிக்கையின் ஆரம்பத்தில் இருந்தே விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிக தொகுதிகளில் முன்னிலை பெற்றது. நேரம் செல்லச்செல்ல தவெகவின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானது. ஆளுங்கட்சியான திமுக பல தொகுதிகளில் பின்னடைவை சந்தித்தது. முக்கிய அமைச்சர்கள் அனைவரும் பின்தங்கினர்.

இந்த நிலையில், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. தலைவரும், முதல்–அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொடர்ந்து பின்னடைவை சந்தித்தார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு முன்னிலை பெற்றார். கட்சியின் தலைவரே பின்னடைவை சந்தித்தது திமுகவினரை அதிர்ச்சியடைய வைத்தது.

பிற்பகலில் வெற்றி நிலவரங்கள் படிப்படியாக வெளியாகத் தொடங்கின. கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்று சாதனை படைத்த மு.க.ஸ்டாலின், இந்த முறை தோல்வியை சந்தித்தார். கொளத்தூரில் பதிவான வாக்குகள் 22 சுற்றுகளாக எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கையின் முடிவில் மு.க.ஸ்டாலின் சுமார் 9 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

மு.க.ஸ்டாலின் அரசியல் பயணம்

1968–ம் ஆண்டு சென்னை கோபாலபுரத்தில் தி.மு.க. இளைஞரணியை மு.க.ஸ்டாலின் தொடங்கினார். 40 ஆண்டுகளுக்கும் மேலாக இளைஞரணி செயலாளராக இருந்த அவர், 1996–ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மேயராக பொறுப்பேற்றார். 2006–2011 வரை உள்ளாட்சி துறை அமைச்சராகவும், அதில், 2009–ம் ஆண்டு முதல் துணை முதல்– அமைச்சராகவும் இருந்தார். 2021–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்ற நிலையில், முதல்–அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார்.

### தேர்தல் வரலாறு

1984 – ஆயிரம் விளக்கு – தோல்வி
1989 – ஆயிரம் விளக்கு – வெற்றி
1991– ஆயிரம் விளக்கு – தோல்வி
1996– ஆயிரம் விளக்கு – வெற்றி
2011 – கொளத்தூர் – வெற்றி
2016– கொளத்தூர் – வெற்றி
2021– கொளத்தூர் – வெற்றி
2026– கொளத்தூர் – தோல்வி

# எடப்பாடி தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிச்சாமி வெற்றி

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், சேலம் மாவட்டத்தின் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிச்சாமி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார். இது அவரது சொந்தத் தொகுதியில் தொடர்ச்சியான வெற்றியை உறுதிப்படுத்தியதோடு, அதிமுகவின் அரசியல் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டிய முக்கிய தருணமாக அமைந்தது.

எடப்பாடி தொகுதி, பழனிச்சாமியின் அரசியல் தாயகமாகக் கருதப்படும் இடம். 2011ம் ஆண்டு முதல் இந்தத் தொகுதியில் அவர் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார். 2021 தேர்தலில் அவர் சுமார் 93,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருந்த நிலையில், 2026 தேர்தலிலும் அதே பலத்துடன் மக்களின் ஆதரவைத் தக்க வைத்தார். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வாக்கு எண்ணிக்கை நாளான இன்று, பல சுற்றுகளுக்குப் பின் அவர் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தார். சுயேச்சை வேட்பாளர் பிரேம்குமார் மற்றும் திமுகவின் காசி உள்ளிட்ட எதிர்த்தரப்பினரை விட வசதியான இடைவெளியில் வெற்றி நோக்கி நகர்ந்தார்.

இந்த வெற்றிக்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன. எடப்பாடி தொகுதி விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலை நம்பியுள்ள பகுதி. காவிரி நீர் பிரச்னை, உள்ளூர் அபிவிருத்தி, ஏரிகள்–குளங்கள் பராமரிப்பு உள்ளிட்ட பிரச்னைகளில் பழனிச்சாமி முதல்வராக இருந்த காலத்தில் எடுத்த நடவடிக்கைகள் மக்களிடையே நல்ல எதிரொலியை ஏற்படுத்தின. அவரது நேரடி தொடர்பு மற்றும் தொகுதி மக்களுக்கான பணிகள், அவரை ஒரு வலுவான தலைவராக நிலைநிறுத்தின. திமுக கூட்டணியின் நலத்திட்டங்கள் இருந்தபோதிலும், அதிமுகவின் அடிப்படை வாக்கு வங்கி மற்றும் பழனிச்சாமியின் தனிப்பட்ட செல்வாக்கு இந்தத் தொகுதியில் மேலோங்கியது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது பழனிச்சாமி, அதிமுகவை வலுப்படுத்தும் வகையில் பல கூட்டணி உத்திகளை வகுத்தார். தனது சொந்த ஊரான சிலுவம்பாளையத்தில் வாக்களித்த அவர், தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அரசின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்த அவர், மக்களின் பிரச்னைகளை முன்னிறுத்தி வாக்கு கேட்டார். வாக்கு எண்ணிக்கையின்போது அவரது வாக்குகள் 70,000க்கும்மேல்சென்று, மற்ற வேட்பாளர்களை விட 40,000க்கும் அதிகமான இடைவெளியை உருவாக்கின.

இது அவரது நான்காவது அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றியாக அமைந்தது.



## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# கேரளாவில் ஆட்சியைக் கைப்பற்றுகிறது காங்கிரஸ் கூட்டணி

திருவனந்தபுரம்: கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 90+ தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இதன் மூலம் இக்கூட்டணி கேரளாவில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற உள்ளது.

காலை 11 மணி நிலவரப்படி, ஐக்கிய ஜனநாயக முன்னணி 92 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 42 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. அதே நேரத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 1 இடத்தில் மட்டும் முன்னிலை வகித்து வருகிறது. கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆகியவை இந்த தேர்தலில் பிரதான அணிகளாக களமிறங்கின.



மொத்தமுள்ள 140 சட்டப்பேரவைத் தொகுதிகளில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டன. இடது ஜனநாயக முன்னணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 86 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் போட்டியிட்டன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டன. கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் 43 மையங்களில் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணும் பணியில் 15,465 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

காலை 11 மணி நிலவரப்படி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 93 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 42 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு தொகுதியில் முன்னிலை வகித்து வருகிறது.

அருதிப் பெரும்பான்மைக்கு 71 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் எனும் நிலையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 90க்கும் அதிக இடங்களில் முன்னிலை வகித்து வருவதால் அக்கூட்டணி மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இருக்கிறது.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சேப்பாக்கம் தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வெற்றி முகம்



தமிழகசட்டசபைதேர்தல்முடிவுகள்வெளியாகி வரும் நிலையில், சென்னை சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வெற்றி பெற்றார்.

அவர் தவெக வேட்பாளர் டி.செல்வத்தை விட சுமார் 11,000 வாக்குகள் கூடுதலாக பெற்று வென்றுள்ளார்.

ஆளும்கட்சியான திமுக இந்த தேர்தலில் தோல்வியடைந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும் கட்சியாக எழுச்சி பெற்றுள்ளது.

மேலும், கொளத்தூர் தொகுதியில் தமிழக முதல்வரான மு.க.ஸ்டாலின் தோல்வியடைந்துள்ளது திமுகவினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், சேப்பாக்கம் தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வெற்றி பெற்றுள்ளது திமுகவினருக்கு ஆறுதலைக் கொடுத்துள்ளது.

இதற்கிடையே,திமுகவின்கோட்டைஎனஎப்போதும்வர்ணிக்கப்படும்சென்னை பகுதியில், ஒரே ஒரு தொகுதியாக சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் மட்டுமே திமுக வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது!




நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழகத்தில் 1952–ம் ஆண்டு முதல் சட்டசபை தேர்தல் நடந்து வருகிறது. முதல் 15 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது.

1967–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தி.மு.க. முதல் முறையாக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.முதல்–அமைச்சராக அண்ணா பொறுப்பேற்றுக்கொண்டார். 1969–ம் ஆண்டு அவரது மறைவுக்கு பிறகு முதல்–அமைச்சராக கருணாநிதி பதவி ஏற்றார். 1971–ம் ஆண்டு தேர்தலிலும் தி.மு.க.வே வெற்றி பெற்று முதல்–அமைச்சராக கருணாநிதி தொடர்ந்தார்.


அதன் பிறகு, தி.மு.க.வில் இருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து அ.தி.மு.க.வை தொடங்கிய பிறகு 1977, 1980, 1985–ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில், அ.தி.மு.க.வே தொடர் வெற்றிகளை பெற்று எம்.ஜி.ஆரே முதல்–அமைச்சராக இருந்தார்.

எம்.ஜி.ஆர். மறைவுக்கு பிறகு நடந்த சட்டசபை தேர்தல்களில் தி.மு.க., அ.தி.மு.க. மாறி.. மாறி.. ஆட்சி அமைத்தது.அதாவது, 1989, 1996, 2006, 2021 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. கருணாநிதி மறைவுக்கு பிறகு 2021–ம் ஆண்டு, அவருடைய மகன் மு.க.ஸ்டாலின் முதல்–அமைச்சராக பொறுப்பேற்றார்.

அதேபோல், 1991, 2001, 2011, 2016 ஆகிய தேர்தல்களில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. 1991, 2001, 2011–ம் ஆண்டுகளில் முதல்–அமைச்சராக ஜெயலலிதா இருந்து வந்த நிலையில், அவருடைய மறைவுக்கு பிறகு 2016–ம் ஆண்டு எடப்பாடி பழனிசாமி முதல்–அமைச்சரானார்.

இப்படி, தமிழகத்தில் 1967–ம் ஆண்டு முதல் 2026–ம் ஆண்டு வரை தொடர்ந்து 59 ஆண்டுகள் திராவிட கட்சிகளின் ஆதிக்கமே மேலோங்கி இருந்த நிலையில், 2026–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம், முதல் தேர்தலிலேயே முத்திரை பதித்து வெற்றி வாகை சூடியுள்ளது. இதன் மூலம் 59 ஆண்டு கால திராவிட கட்சிகளின் ஆதித்தமும் முடிவுக்கு வந்துள்ளது.

# விருதுநகர் தொகுதியில் விஜய பிரபாகரன் தோல்வி; தவெக வெற்றி



விருதுநகர் (விருதுநகர்): விருதுநகர் சட்டமன்ற தொகுதியில் தேமுதிகவின் விஜய பிரபாகரனை தோல்வியை தழுவினார். தவெகவைச் சேர்ந்த செல்வம் வெற்றி பெற்றார்.

2026ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலில் 85.15% வாக்குகள் பதிவாகியுள்ளன. விஜபி மாவட்டமான விருதுநகர் மாவட்டத்தில் 84.85% மக்கள் வாக்களித்துள்ளனர். அதில் கர்மவீரர் காமராசர் பிறந்த இடமான விருதுநகர் தொகுதியில் 1,98,616 வாக்காளர்கள் உள்ள நிலையில் 82.77% வாக்குகள் பதிவாகியுள்ளன.

பலசரக்கு வியாபாரத்தில் முன்னணியில் இருக்கிற இந்த தொகுதியானது 1952ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதுவரை மொத்தம் 14 தேர்தல்கள் நடைபெற்றுள்ள நிலையில், 5 முறை திமுகவும், 2 முறை அதிமுகவும், காங்கிரஸ், ஜனதா கட்சி, சோஷலிஸ்ட் காங்கிரஸ், தமாகா, மதிமுக, தேமுதிக, சுயேச்சை ஆகிய கட்சிகள் தலா ஒரு முறையும் வெற்றிபெற்றுள்ளன.

விருதுநகர் தொகுதிக்கு நீண்ட நெடிய அரசியல் வரலாறு இருக்கிறது. ஏனென்றால் தனது சொந்த ஊரில் 1967 இல் போட்டியிட்ட காமராசர் அங்கு மக்கள் ஆதரவின்றி தோல்வியை தழுவினார். விருதுநகர் தொகுதியில் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். வறண்ட பூமியாக இருப்பதால் இங்கு குடிநீர் பிரச்சினை மிகவும் அதிகமாக காணப்படுகிறது.

கடைசியாக,10,716வாக்குகள் வித்தியாசத்தில் விஜயபிரபாகரனைதோற்கடித்து, தவெக எஸ்.பி செல்வம் விருதுநகர் தொகுதியை கைப்பற்றியுள்ளார்.

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு அண்ணாமலை வாழ்த்து




தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23–ந்தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வரை விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் வெற்றியை உறுதி செய்துள்ளார். இந்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய்க்கு பா.ஜ.க முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழ்நாடு அரசியலில் பிரமாண்டமான அறிமுகத்தைப் பெற்றிருக்கும் விஜய்க்கு வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார்.



# "அரசியலில் யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம்.. தோற்கலாம்... தமிழிசை பேட்டி

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், விஜய்யின் தவெக 110 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இந்த நிலையில், தேர்தல் முடிவுகள் குறித்து பாஜகவின் தமிழிசை சவுந்தரராஜன் கூறி இருப்பதாவது;

"அரசியலில் யார் வேண்டுமானாலும் வெற்றி பெறலாம்.. தோற்கலாம். தேர்தல் முடிவுகளை விஜய் அலை என்று சொல்வதா? அல்லது திமுக வெறுப்பு அலை என்று சொல்வதா என தெரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய ஜனநாயக கூட்டணி மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். தோல்வியடைந்த வேட்பாளர்கள் மக்களுக்காக பணியாற்ற வேண்டும். எங்கள் அரசியல் இன்னும் தீவிரமாக தொடரும்."

இவ்வாறு அவர் கூறினார்.

# விளவங்கோடு தொகுதியில் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் விஜயதரணி தோல்வி



2026 சட்டப்பேரவைத் தேர்தலைப் பொறுத்தவரை, விளவங்கோடு தொகுதி ஒருநட்சத்திரத்தொகுதியாக இருந்தது. கடந்த மூன்று முறை காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்ற விஜயதரணி,தற்போது பா.ஜ.க சார்பில் களம் காண்பதால் இத்தொகுதி விஐபி அந்தஸ்தை பெற்று இருந்தது. இந்த தொகுதியில் , காங்கிரஸ் வேட்பாளர் டி.டி. பிரவீனுக்கும், பா.ஜ.க வேட்பாளர் விஜயதாரணிக்கும் இடையேதான் நேரடிப் போட்டி நிலவியது.வாக்குஎண்ணிக்கையிலும் இந்த முடிவே பிரதிபலித்தது.

காங்கிரஸின் கோட்டையாகக் கருதப்படும் இத்தொகுதியில் விஜயதரணி தோல்வியை சந்தித்தார். காங்கிரஸ் கட்சி சார்பில் களம் இறக்கப்பட்ட பிரவீன் வெற்றி பெற்றார். இவரை களம் இறக்கியதற்கு காங்கிரஸ் கட்சிக்காரர்களே எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்கள். எனினும், எதிர்ப்பையும் சமாளித்து வெற்றியை தனதாக்கியுள்ளார் டிடி பிரவீன்

விஜயதரணி, இத்தொகுதியில் காங்கிரஸ் சார்பில் மூன்று முறை வெற்றி பெற்றிருந்தார். அந்தத் தனிப்பட்ட செல்வாக்கு பா.ஜ.க–வின் வாக்கு வங்கியுடன் இணையும் போது, அது தனக்கு வெற்றியைத் தேடித்தரும் என அவர் மலைபோல நம்பினார். ஆனால் அவருக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது.

# இனிவரும் காலங்களில் சிறந்த நன்மைகள் விளையும்; நானி நம்பிக்கை



தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026–ன் வாக்கு எண்ணிக்கை விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில்,தேர்தல் கள நிலவரங்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. பல கோடி ரூபாய் செலவு செய்து, வாக்காளர்களுக்குப் பணமும், அண்டா–குண்டா போன்ற பரிசுப் பொருட்களையும் வாரி இறைத்த திமுக, அதிமுக கட்சிகளைப் பின்னுக்குத்தள்ளி,நடிகர்விஜய்யின்தமிழகவெற்றிக் கழகம் யாரும் எதிர்பாராத வகையில் முன்னிலை வகித்து வருகிறது.

அந்த வகையில், தற்போதுவரை தவெகவின் விஜய் 100–க்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் ஒரு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க, ஒரு கட்சி அல்லது கூட்டணிக்கு 118 தொகுதிகள் தேவைப்படுகின்றன. இந்த சூழலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தற்போது வரை 102 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில், தெலுங்கு சினிமாவின் பிரபல நடிகரான நானி ,தவெக தலைவர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து பதிவிட்டுள்ளார். அதில், முதலில் சந்தேகிக்கப்பட்டார்;பின்னர் முடிசூட்டப்பட்டார்.இது நம் வீட்டில் நிகழ்ந்தது; இப்போது நம் அண்டை வீட்டிலும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எதிர்பாராத ஒருவர் (Underdog) வெற்றி பெறுவது என்பது எப்போதுமே முழுமையான சினிமா போன்றதுதான். தங்கள் முடிவை மிகத்தெளிவாகத்தெரிவித்திருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு, இனிவரும் காலங்களில் சிறந்த நன்மைகள் விளையும் என்று நம்புகிறேன். என்று பதிவிட்டுள்ளார்.

# காரைக்குடியில் சீமானை வீழ்த்தி தவெக வேட்பாளர் பிரபு அபார வெற்றி!




தமிழகச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் ஒட்டுமொத்த மாநிலத்தையும் திகைப்பில் ஆழ்த்தியுள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்தின் மிக முக்கியத் தொகுதியான காரைக்குடியில் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) வேட்பாளர் பிரபு மாபெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானை எதிர்த்துப் போட்டியிட்ட பிரபு, அவரைத் தோற்கடித்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தமிழகம் முழுவதும் தவெக அசுர பலத்துடன் முன்னிலைபெற்றுவரும் நிலையில், காரைக்குடி தொகுதியின் முடிவு அக்கட்சிக்கு மேலும் ஒரு வலுவான வெற்றியைத் தேடித்தந்துள்ளது. காரைக்குடி தொகுதியில் போட்டியிட்ட தவெக வேட்பாளர்பிரபு,தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர்களைப்பின்னுக்குத்தள்ளி வெற்றி பெற்றுள்ளார். தமிழகம் முழுவதும் தவெக 109 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருவதால், காரைக்குடி போன்ற முக்கியத் தொகுதி களில் கிடைத்துள்ள இந்த வெற்றி விஜய்யின் அரசியல் ஆளுமையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. ஏற்கனவே கொளத்தூர் தொகுதியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பின்னடைவைச்சந்தித்து வரும் நிலையில், காரைக்குடியில் சீமானின் தோல்வி தவெகவின் அலை மாநிலம் முழுவதும் வீசுவதை உறுதி செய்கிறது.

நாஞ்சில் சம்பத் குறிப்பிட்டது போல,இது திராவிடக்கட்சிகளுக்குமாற்றாக மக்கள் வழங்கியுள்ள ஒரு "வரலாற்று வெற்றி" ஆகும். இந்த வெற்றியைக் காரைக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தவெக தொண்டர்கள் மிக விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர்.

# கோவை தெற்கில் திமுக வேட்பாளர் செந்தில் பாலாஜி வெற்றி



தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கான பொதுத் தேர்தல் கடந்த ஏப்ரல் 23–ம் தேதி ஒரே கட்டமாக அமைதியான முறையில் நடைபெற்றது. மக்கள் உற்சாகத்துடன் பங்கேற்ற இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை 8 மணியிலிருந்து எண்ணப்பட்டு வருகின்றன. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் (EVM) பதிவான வாக்குகள் வரிசையாக கணக்கிடப்பட்டு வருகின்றன.

எண்ணிக்கைதொடங்கிய சில மணி நேரங்களிலேயே முன்னிலைப் படங்கள் தெளிவாகத் தெரியத் தொடங்கின. தற்போதைய நிலவரப்படி, 234 தொகுதிகளில் தவெக (தமிழக வெற்றிக் கழகம்) 105 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. திமுக 57 தொகுதிகளிலும், அதிமுக 46 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

இந்தப் போட்டி மிகவும் கடுமையானதாக இருப்பதால், இறுதி முடிவுகள் வரும் வரை பரபரப்பு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், சில தொகுதிகளில் திமுக வேட்பாளர்கள் வெற்றியை உறுதி செய்துள்ளனர். கோவை தெற்கு தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட செந்தில் பாலாஜி அமோக வெற்றி பெற்றார். அவர் 53,165 வாக்குகள் பெற்று, 4,990 வாக்குகள் வித்தியாசத்தில் எதிரணியை தோற்கடித்தார். அதேபோல், ஒட்டன்சத்திரம் தொகுதியில் திமுக வேட்பாளர் சக்கரபாணி 65,152 வாக்குகள் பெற்று 28,827 வாக்கு வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்றுள்ளார்.

# சுயேச்சைகள் யாரும் வெற்றி இல்லை



தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில், சுயேச்சை வேட்பாளர்களும் வெற்றி பெற்று சட்டசபையை அலங்கரித்து வந்துள்ளனர். 1967–ல் 6, 1971–ல் 8, 1977–ல் 1, 1980–ல் 8, 1984–ல் 4, 1989–ல் 5, 1991–ல் 1, 1996–ல் 1, 2001–ல் 3, 2006–ல் 1 என்ற எண்ணிக்கையில் சுயேச்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்று வந்தனர்.

ஆனால், 2011, 2016–ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல்களில், சுயேச்சை வேட்பாளர் ஒருவர்கூட வெற்றிபெறவில்லை. அதே நேரத்தில், 2016–ம் ஆண்டு ஜெயலலிதாமறைவுக்குபிறகுஆர்.கே.நகர்தொகுதியில், சுயேச்சையாக போட்டியிட்டு டி.டி.வி.தினகரன் வெற்றி பெற்றார்.

சட்டசபையில் ஒரு சுயேச்சை எம்.எல்.ஏ. இருந்த நிலையில், கடந்த தேர்தலில் (2021) சுயேச்சை வேட்பாளர்கள் யாரும் வெற்றி பெறவில்லை. இந்தத் தேர்தலிலும் சுயேச்சைகள் யாரும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 3 தொகுதிகள்... புதுச்சேரியில் வெற்றிக் கணக்கை தொடங்கிய தவெக!



புதுச்சேரியில் தவெக 28 தொகுதிகளிலும், அக்கட்சி கூட்டணி அமைத்த நேயம் மக்கள் கழகம் இரு தொகுதிகளிலும் போட்டியிட்டன. புதுச்சேரியில் தவெக பல தொகுதிகளில் இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களில் கணிசமான வாக்குகளை பெற்றுள்ளது.

இதில் மணவெளி தொகுதியில் தவெக வேட்பாளர் ராமு 13,822 வாக்குகள் பெற்று வென்றார். அவருக்கு அடுத்தபடியாக உள்ள பாஜக வேட்பாளரும் சட்டப்பேரவைத் தலைவருமானசெல்வம் 10,729 வாக்குகளுடன் தோற்றார். இருவருக்கும் உள்ளவாக்குவித்தியமாசம் 3,093 ஆக உள்ளது. காங்கிரஸ் வேட்பாளர் அனந்தராமன் 5,932 வாக்குகளுடன் 3–ம் இடம் பிடித்தார்.

பாஜகவில் இருந்த ராமு தனக்கு போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால் தவெகவுக்கு சென்று வென்றுள்ளார். புதுச்சேரியில் முதல் தவெக எம்எல்ஏ என்ற நிலையை அடைந்துள்ளார்.

உருளையன்பேட்டை மற்றும் தட்டாஞ்சாவடியில் தவெகவுடன் கூட்டணி அமைத்து நேயம் மக்கள் கழகம் போட்டியிட்டது. அதில் தட்டாஞ்சாவடியில் தோற்றாலும் உருளையன்பேட்டையில் நேயம் மக்கள் கழக தலைவர் நேரு 1,201 வாக்கு வித்தியாசத்தில் வென்றார். அவர் 9,960 வாக்குகள் பெற்றார்.

திமுக கோபால் 8,759 வாக்குகளும்,3–ம் இடத்தில் அதிமுக காந்தி 300 வாக்குகளும் பெற்றிருந்தனர்.

சாய் சரவணன் குமார் வெற்றி:

பாஜகவில் அமைச்சராக இருந்த சாய் சரவணன் குமாரை ராஜினாமா செயயச் சொல்லி ஜான் குமாருக்கு அமைச்சர் பொறுப்பு கடந்த அரசில் தரப்பட்டது. இறுதியில் பாஜகவில் போட்டியிட முன்னாள் அமைச்சர் சாய் சரவணன் குமாருக்கு வாய்ப்பு தரவில்லை. இதையடுத்து, கட்சியிலிருந்து விலகி தவெகவில் இணைந்தார். இந்தத் தேர்தலில் திருபுவனையில் போட்டியிட்டார்.தவெகவில் சாய் சரவணன் குமார் 9,740 வாக்குகள் பெற்று வென்றார். இதையடுத்து தவெக புதுச்சேரியில் 2 தொகுதிகளிலும், கூட்டணிக் கட்சியான நேயன் மக்கள் கழகம் ஒரு தொகுதியிலும் வென்றுள்ளது. இதன்மூலம், புதுச்சேரியில் தவெக கூட்டணி 3 தொகுதிகளில் இதுவரை வென்றுள்ளது.

முதல் தேர்தலில் தவெகவும், தவெக கூட்டணிக் கட்சியும் தனது வெற்றிக் கணக்கை புதுச்சேரியில் துவக்கியுள்ளது.

# கோபிச்செட்டிபாளையம் தொகுதியில் தவெக வேட்பாளர் செங்கோட்டையன் வெற்றி



தவெக நிர்வாகி செங்கோட்டையன் 10 ஆவது முறையாகவும், தொடர்ந்து 5 ஆவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ளார் சுமார் 13,000 வாக்குகள் வித்தியாசத்தில் செங்கோட்டையன் வெற்றி பெற்றுள்ளார். எடப்பாடி பழனிசாமியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அதிமுகவில் இருந்து தவெகவுக்குச் சென்ற செங்கோட்டையன் தனது தொகுதியில் முதல்முறையாக தவெக சார்பில் போட்டியிட்ட்ட அவர் வெற்றியை பெற்றுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வரும் நிலையில் பிற்பகல் 2.30 மணி நிலவரப்படி தவெக –108, திமுக – 66, அதிமுக 60 தொகுதிகளில் முன்னிலையில் இருந்து வருகிறது. ஆட்சியமைக்க 117 தொகுதிகள் பெரும்பான்மை தேவை.

# தருமபுரி தொகுதியில் பாமகவின் சௌமியா அன்புமணி வெற்றி



தருமபுரி: 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகி வரும் நிலையில், தருமபுரி சட்டமன்ற தொகுதியில் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி வெற்றி பெற்றுள்ளார்.

2026 தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த மாதம் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. இந்த தேர்தலில் வாக்காளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களித்தனர். 234 தொகுதிகளில் நடைபெற்ற இந்த வாக்குப்பதிவில் சுமார் 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகின. இது இதுவரை இல்லாத வாக்குப்பதிவு சதவீதம் ஆகும். தமிழகத்தில் மொத்தமுள்ள 5.67 கோடி வாக்காளர்களில் சுமார் 4.87 கோடி பேர் ஜனநாயக கடமையாற்றினர்.


இந்தநிலையில், தருமபுரி சட்டமன்ற தொகுதியில் (மே 4) காலை 8 மணிக்கு தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நிலையில், அது தொடங்கியது முதலே பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி முன்னிலை வகித்து வருகிறார். 5 ஆம் சுற்று நிலவரப்படி 21 ஆயிரத்து 202 வாக்குகளைப் பெற்று அவர் முன்னிலை வகித்து வருகிறார். இவருக்கு அடுத்தபடியாக 15 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்று தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சிவன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.


தொடர்ந்து மூன்றாம் இடத்தில் தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் உள்ளார். 7 ஆயிரத்து 763 வாக்குகளை அவர் பெற்றுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தருமபுரி சட்டமன்ற தொகுதியில், கடந்த 2001 க்குப் பிறகு 3 முறை பாமக வெற்றி பெற்றுள்ளது. 2021 தேர்தலில் பாமக வேட்பாளர் வெங்கடேஸ்வரன் 1 லட்சத்து 5 ஆயிரத்து 630 வாக்குகளைப் பெற்று வெற்றிப் பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் தடங்கம் பெ. சுப்பிரமணி 78 ஆயிரம் 770 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியுற்றார்.

இதேபோல், 2006 இல் பாமக வேட்பாளர் இல.வேலுசாமியும், 2001 இல் பாமக வேட்பாளர் கி.பாரிமோகனும் வெற்றி பெற்றனர். இதைத்தொடர்ந்து, 2026 தேர்தலிலும் பாமக வெற்றிக் கனியைப் பறித்துள்ளது. 85 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் சிவன் 67 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்கு களைப் பெற்று தோல்வியைத் தழுவினார்.

# மு.க.ஸ்டாலினை வீழ்த்திய வி.எஸ்.பாபு யார் பின்னணி என்ன?





சென்னையில் உள்ள நட்சத்திர தொகுதியான கொளத்தூரில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் போட்டியிட்டார். 2011-ம் ஆண்டு தொகுதி மறு சீரமைப்பில் உதயமான இந்த தொகுதியில், ஆரம்பம் முதல் மு.க.ஸ்டாலினே வெற்றி வாகை சூடி வந்திருக்கிறார். ஆனால், இந்த முறை யாரும் எதிர்பார்க்காத வகையில், வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நேரத்தில் இருந்தே மு.க.ஸ்டாலின் பின்னடைவை சந்தித்து வந்தார். அவரை எதிர்த்து நின்ற த.வெ.க. வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்த நேரத்தில், யார் இந்த வி.எஸ்.பாபு என்ற கேள்வி அனைவரது மனதிலும் எழலாம். ஒரு காலத்தில், வி.எஸ். பாபுவும், தி.மு.கவில் இருந்தவர்தான். அதுவும் வடசென்னை மாவட்ட செயலாளராக இருந்துள்ளார். கடந்த 2006-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் புரசைவாக்கம் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வி.எஸ்.பாபு வெற்றி பெற்றார்.

2011-ம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்புக்கு பிறகு கொளத்தூர் தொகுதி உதயமான போது, அதில் மு.க.ஸ்டாலின் வேட்பாளராக களம் கண்டார். அவரது வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தவர் வி.எஸ்.பாபு. ஆனாலும், அ.தி.மு.க. வேட்பாளர் சைதை துரைசாமியை விட சுமார் 2 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் மு.க.ஸ்டாலின் வெற்றி பெற்றார். இதனால், தி.மு.க. தலைமை வி.எஸ்.பாபு மீது அதிருப்தியில் இருந்தது.

அந்த நேரத்தில், அ.தி.மு.கவில் இருந்து தி.மு.கவுக்கு வந்த சேகர்பாபு வசம் வடசென்னை தி.மு.க. சென்றது. கட்சியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட வி.எஸ்.பாபு, அ.தி.மு.கவில் இணைந்தார். ஆனாலும், அ.தி.மு.கவிலும் அவருக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால், அதிருப்தியில் இருந்து வந்த வி.எஸ். பாபு, கடந்த சில மாதங்களுக்கு முன்பு, த.வெ.க. தலைவர் விஜய்யை சந்தித்து அக்கட்சியில் இணைந்தார்.

அவருக்கு மு.க.ஸ்டாலினை எதிர்த்து போட்டியிட வாய்ப்பும் வழங்கப்பட்டது.

முதல்-அமைச்சரை எதிர்த்து எப்படி வெற்றி பெற முடியும் என்று அவர் நினைக்காமல், களத்தில் பணியாற்றினார். தற்போது, யாரும் எதிர்பார்க்காத வகையில் வெற்றி வாகை சூடியுள்ளார். ஒரு காலத்தில், மு.க.ஸ்டாலின் வெற்றிக்காக உழைத்தவர், இன்றைக்கு அவரையே வீழ்த்தி வெற்றி வாகை சூடியுள்ளார். ஆனால், இதுபோன்ற நிகழ்வுகள் எல்லாம் அரசியலில் சாதாரணம்.





# தவெக தலைவர் விஜய்க்கு நடிகர் சிவகார்த்திகேயன் வாழ்த்து

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலவரப்படி தவெக 102, திமுக 75, அதிமுக 57 தொகுதிகளில் முன்னிலை வகிக்கின்றன. அதிமுக, திமுக மாறி மாறி 2–ம் இடத்துக்கு போட்டாபோட்டி நிலவிய நிலையில் தற்போது திமுக 2–ம் இடத்தில் உள்ளது. தமிழகம் முழுவதுமே மண்டலங்கள் கடந்து பரவலாக தவெக தொடர் முன்னிலையில் இருக்கிறது.

சட்டமன்ற தேர்தலில் முன்னிலை பெற்றுள்ள விஜய்க்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துக்ள் குவிந்து வருகின்றன. அந்த வகையில், நடிகர் சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: போட்டியிட்ட முதல் தேர்தலில் இவ்வளவு பெரிய தாக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி இந்த வெற்றியை பெற்றிருக்கும் விஜய் சாருக்கு வாழ்த்துகள். நீங்கள் திரைத்துறையை சார்ந்தவர் என்பதில் கூடுதல் மகிழ்ச்சி, மக்கள் பணி சிறக்க வாழ்த்துகள் சார் என்றார்.

## தேர்தல் முடிவுகள்:
# பின்னடைவில் திமுக.. களையிழந்துள்ள அண்ணா அறிவாலயம்



தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், விஜய்யின் தவெக 110 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. ஆளும் திமுக கூட்டணியானது 66 தொகுதிகளிலேயே முன்னிலை பெற்றுள்ளது.

முன்னதாக, அண்ணா அறிவாலயத்தில் திமுகவின் வெற்றியை கொண்டாடும் வகையில் பட்டாசுகள், நிர்வாகிகளுக்காக பந்தல்கள் போடப்பட்டிருந்தது. இந்தநிலையில், தற்போது அண்ணா அறிவாலயத்தில் போடப்பட்டிருந்த பந்தல்கள் அகற்றப்பட்டு வருகின்றன. திமுக பின்னடைவை சந்தித்துள்ளதால் அண்ணா அறிவாலயம் களையிழந்துள்ளது.

# ராதாபுரம் தொகுதியில் போட்டியிட்ட சபாநாயகர் அப்பாவு தோல்வி





தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23–ந்தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டுபோடதகுதிபெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

தேர்தலில் பதிவான வாக்குகள் 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வரை விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 107 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார்.

இந்நிலையில், நெல்லை மாவட்டம் ராதாபுரம் தொகுதியில், இதுவரை நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. வேட்பாளர் சதீஷ் கிறிஸ்டோபர் 69,556 வாக்குகள் பெற்று, 12,216 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை உறுதி செய்துள்ளார். அதே சமயம், ராதாபுரம் தொகுதியில் போட்டியிட்ட சபாநாயகர் அப்பாவு 57,340 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்துள்ளார்.

இந்த தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் பாலகிருஷ்ணன் 52,084 வாக்குகளும், நாம் தமிழர் வேட்பாளர் கிரிஜா தாமரைப்பாண்டியன் 15,272 வாக்குகளும் பெற்று தோல்வி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகளை கடந்து த.வெ.க. சாதனை



தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23–ந்தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் ஓட்டு போட தகுதி பெற்றிருந்தனர். மொத்தம் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

அதில் 4 கோடியே 87 லட்சத்து 99 ஆயிரத்து 885 வாக்குகள் ஈ.வி.எம். எந்திரம் மூலமாகவும், தபால் வாக்குகளாக 5 லட்சத்து 80 ஆயிரத்து 384–ம் பதிவாகி இருந்தன. தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

தற்போதுவரை விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் 107 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. த.வெ.க. தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார்.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகம் ஒரு கோடி வாக்குகளை கடந்து சாதனை படைத்துள்ளது. மாலை 3 மணி நிலவரப்படி, த.வெ.க. 1 கோடியே 9 லட்சம் வாக்குகளை பெற்றுள்ளது. இது 22.54 சதவீதமாகும். தொடர்ந்து, தி.மு.க. 71.97 லட்சம் வாக்குகளுடன் 2–வது இடத்திலும், அ.தி.மு.க. 66.53 லட்சம் வாக்குகளுடன் 3–வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிடிஆர் போட்டியிட்ட மதுரை மத்திய தொகுதியில் தவெக அதிரடி வெற்றி



மதுரை: தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் (மே 4) வெளியாகி வரும் நிலையில், மதுரை மத்திய சட்டமன்ற தொகுதியில் வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்தது.

இந்நிலையில் தவெக வேட்பாளர் மதர் பக்ருதீன் 19,124 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். மொத்தம் 19 சுற்று வாக்குஎண்ணிக்கையில், மதார் பகுருதீன் 63075 வாக்குகளும், 2வது இடத்தில் பழனிவேல் தியாகராஜன் 43834 வாக்குகள் பெற்றுள்ளார். அவரை தொடர்ந்து 3வது இடத்தில் சுந்தர்.சி 33298 வாக்குகள் பெற்றுள்ளார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மதார் பகுருதீன் முஸ்தபா, கரூரில் இறந்த 41 பேரின் ஆன்மாக்கள் தான் தமிழக வெற்றி கழகத்தை வெல்ல வைத்து திமுகவை வீழ்ச்சி அடைய செய்துள்ளது" என கூறினார். நட்சத்திர தொகுதியான மதுரை மத்தியில் திமுக சார்பில் பழனிவேல் தியாக ராஜன், அதிமுக கூட்டணியில் திரைப்பட இயக்குநர் சுந்தர்.சி புதிய நீதி கட்சிசார்பாக போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் பழனிவேல் தியாகராஜன் ஹாட்ரிக் வெற்றி பெற தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். மறுபக்கம் திரைப்பிரபலமாக மக்கள் மத்தியில் சுந்தர்.சி சென்று சேர்ந்துள்ளார். அந்த சினிமா மோகம் வெற்றி பெற உதவும் என்ற காரணத்தால் மதுரை மத்திய தொகுதியில் கடும் போட்டி நிலவுகிறது.

1957–க்கு பிறகு மதுரை மத்திய சட்டப் பேரவை தொகுதி இதுவரை 16 பொதுத் தேர்தல்களை சந்தித்துள்ளது இதில் திமுக 7, காங்கிரஸ் 4, தமாகா 2, அதிமுக, தேமுதிக, சுயேட்சையாக பழ.நெடுமாறன் தலா முறையும் வெற்றி பெற்றுள்ளனர். கடந்த 2021–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஜோதி முத்துராமலிங்கத்தை 34,176 வாக்கு வித்தியாசத்தில் பழனிவேல் தியாகராஜன் தோற்கடித்தார்.

# 60 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டில் புரட்சி ஏற்பட்டுள்ளது ஆதவ் அர்ஜூனா பேட்டி



தமிழ்நாட்டில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்தஏப்ரல் 23–ஆம் தேதி ஒரேகட்டமாக வாக்குப் பதிவு நடைபெற்றது. 85.10 சதவிகித வாக்குகள் பதிவாகின. தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் தவெக 110 தொகுதிகளுக்கு முன்னிலை வகித்து வருகிறது. அதன் தலைவர் விஜய் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார். இந்தநிலையில் தவெகவின் வில்லிவாக்கம் வேட்பாளர் ஆதவ் அர்ஜூனா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- 60 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டில் புரட்சி ஏற்பட்டுள்ளது. இளைஞர்களும் பெண்களும் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டியுள்ளனர். மன்னராட்சிக்கு முடிவு எழுதப்பட்ட நாள் இன்று. விஜய் மீது கடுமையான அவதூறுகள் பரப்பப்பட்டன. திமுக அரசே எதிர்த்து நின்றது என்றார்.

# தவெக தலைவர் விஜய் வீட்டிற்கு 2 அடுக்கு பாதுகாப்பு



சென்னை: தவெக தலைவர் விஜயை காண அவரது வீட்டின் முன்பு ரசிகர்களும், தொண்டர்களும் குவிந்துவரும் நிலையில் அவரது வீட்டிற்கு செல்லும் வழியிலும், வீட்டிற்கும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 வாக்கு எண்ணிக்கையானது இன்று காலை 8 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. 234 தொகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 62 வாக்கு எண்ணிக்கை மையங்களில் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் முன்னிலை வகுத்தது. தவெக தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளிலுமே காலை 10.50 நிலவரப்படி தவெக தான் முன்னிலை வகித்து வருகிறது. குறிப்பாக, மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 220 தொகுதிகளுக்கான முன்னிலை நிலவரம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தவெக முதலிடத்திலும், அதிமுக இரண்டாம் இடத்திலும் இருக்கிறது.

இந்நிலையில், விஜய்யை முன்கூட்டியே வாழ்த்த, பலர் அதிகாலையே விஜய் வீட்டின் முன்பு திரண்டதால் விஜய்யின் நீலாங்கரை இல்லத்திற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விஜய் வீட்டிற்கு வெளியே ஒரு துணை ஆணையர், ஒரு உதவி ஆணையர், ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் CRPF வீரர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் விஜய் இல்லத்திற்கு வரக்கூடிய கபாலீஸ்வரர் நுழைவாயிலிலும் 150–க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். விஜயை காண்பதற்காக அங்கு ரசிகர்களும் தொண்டர்களும் அதிகளவில் கூடாமல் இருக்க 2 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனிடையே தவெக பனையூர் தலைமை அலுவலகத்தின் வெளியேயும் தொண்டர்களும், நிர்வாகிகளும் காத்திருக்கின்றனர்.

# எம்.ஜி.ஆருக்கு பிறகு.. சட்டசபை தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய விஜய்..!



தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் (ஏப்ரல்) 23-ந் தேதி ஒரே கட்டமாக நடந்தது. தேர்தல் களத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி, அ.தி.மு.க., பா.ஜனதா உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி என இருபெரும் அணிகளுடன், தமிழக அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சியும் இறங்கின.

இது தவிர டாக்டர் ராமதாஸ், சசிகலா இணைந்து ஒரு கூட்டணி அமைத்தும் போட்டியிட்டனர். இருப்பினும் களத்தில் 4 முனை போட்டி ஏற்பட்டது. அதிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. கட்சிகளிடையே கடும் போட்டி இருந்ததை காணமுடிந்தது. அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுடன், சுயேச்சை வேட்பாளர்களும் சேர்ந்து 234 தொகுதிகளிலும் 4 ஆயிரத்து 23 பேர் தேர்தல் களத்தில் இருந்தனர். தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக்கணிப்புகள் வெளிவந்து பெரும் எதிர்பார்ப்பைஏற்படுத்தி இருந்தன.

இந்த சூழலில் 234 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று (திங்கட்கிழமை) எண்ணப்பட்டு வருகின்றன. இதன் முடிவில் யார் அரியணையில் அமரப்போகிறார்கள் என்பது தெரியவரும். தற்போது நடைபெற்று வரும் தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்ப கட்டத்திலிருந்தே முன்னிலை வகித்து வருகிறது. வாக்கு எண்ணிக்கை இன்னும் தொடர்ந்து நடைபெற்று வரும் வேளையில், தவெக முன்னிலையில் இருப்பது அவரது ரசிகர்கள் மற்றும் அக்கட்சியினரிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் யாருமே எதிர்பார்க்காத வகையில் தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில், தற்போதுவரை விஜயின் தவெக 100-க்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் ஒரு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க, ஒரு கட்சி அல்லது கூட்டணிக்கு 118 தொகுதிகள் தேவைப்படுகின்றன. இந்த சூழலில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) 100 தொகுதிகளுக்கு மேல் முன்னிலையில் உள்ளது.

தமிழ் சினிமா உலகில் முன்னணி ஹீரோவாக கோலோச்சிக்கொண்டிருந்த விஜய், தவெக கட்சியை ஆரம்பித்த இரண்டே ஆண்டுகளில் அரசியல் களத்திலும் வலுவாக கால் பதித்துள்ளார். முதல் தேர்தலிலேயே ஆட்சியை பிடிக்கும் நிலைக்கு வந்துள்ளார் விஜய். தமிழக அரசியல் வரலாற்றில் இது திருப்புமுனையான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

முன்னாள் முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆருக்கு பிறகு கட்சி ஆரம்பித்த உடன் பெரும் தாக்கத்தை விஜய் ஏற்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி நடைபெற்றுவரும் சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சி தலைவராகிறார், உதயநிதி ஸ்டாலின்



74 ஆண்டு கால தமிழக தேர்தல் வரலாற்றில், யாரும் எதிர்பாராத வகையிலான தேர்தல் முடிவை 17-வது சட்டசபை தேர்தல் தந்திருக்கிறது. தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலினே தோல்வியை சந்தித்து இருக்கிறார். த.வெ.க. முன்னிலை பெற்றுள்ள நிலையில், தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரத்தில், 2-வது இடத்தை தி.மு.க. கூட்டணி பிடித்துள்ளது. எனவே, தி.மு.க.வில் இருந்தே எதிர்க்கட்சி தலைவர் தேர்வு செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது. சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்றுள்ள மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதி, எதிர்க்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட அதிகம் வாய்ப்புள்ளது.

ஏற்கனவே, துணை முதல்-அமைச்சராக அவர் இருந்துள்ளார். எனவே, விஜயை எதிர்க்க உதயநிதியே சரியான ஆளாக இருப்பார் என்று தி.மு.க. தலைமை கருதுகிறது. என்றாலும், கட்சியின் தலைவரே தோல்வி அடைந்துள்ளார் என்பதை தி.மு.க. தலைமை வருத்தத்தில் இருக்கிறது.

என்றாலும், மு.க.ஸ்டாலினுக்கு இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதாவது, திருச்சி கிழக்கு தொகுதியை விஜய் விட்டுக்கொடுக்கும் பட்சத்தில், அங்கு இடைத்தேர்தல் நடைபெறும். அதில் வேண்டுமானால் மு.க.ஸ்டாலின் மீண்டும் போட்டியிடலாம்.

# மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி பின்னடைவு.. முதல் முறையாக ஆட்சியை பிடிக்கிறது பாஜக




மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று பலத்த பாதுகாப்புடன் எண்ணப்படுகின்றன. பெரும்பாலான கருத்துக்கணிப்புகள் ஆளும் திரிணாமுல் காங்கிரசுக்கு எதிராக வந்திருந்ததால் தேர்தல் முடிவு குறித்து பெரிய எதிர்பார்ப்பு எழுந்திருக்கிறது. இந்த கருத்துக் கணிப்புகளை உறுதி செய்யும்வகையில் முன்னிலை நிலவரங்கள் மம்தா பானர்ஜிக்கு எதிராகவே இருக்கின்றன.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. 30 நிமிடங்களுக்குப் பிறகு, அதாவது காலை 8:30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது. ஆரம்பம் முதலே பாஜக கூட்டணி அதிக தொகுதிகளில் முன்னிலையில் இருந்தது. மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் இரண்டாவது இடத்தில் இருந்தது. போட்டியிட்ட முதல்-மந்திரி மம்தா பானர்ஜி ஆரம்பத்தில் பின்னடைவை சந்தித்தார். அவரை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க.வின் சுவெந்து அதிகாரி முன்னிலை வகித்தார். பிற்பகல் நிலவரப்படி மம்தா பானர்ஜி முன்னிலை பெற்றார். சுவெந்து அதிகாரி தான் போட்டியிட்ட மற்றொரு தொகுதியான நந்திகிராம் தொகுதியில் தொடர்ந்து முன்னிலையில் உள்ளார். காலை 11 மணி நிலவரப்படி மேற்கு வங்காளத்தில் பெரும்பான்மைக்கு தேவையான இடங்களைவிட அதிக இடங்களில் பாஜக கூட்டணி முன்னிலையில் உள்ளது. பெரும்பான்மைக்கு 148 இடங்கள் தேவை என்ற நிலையில், அதையும் தாண்டி 186 தொகுதிகளில் பாஜக கூட்டணி வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளனர். குறிப்பாக தொழில்துறை மண்டலத்தில் பாஜக அதிக அளவிலான தொகுதிகளில் முன்னிலையைப் பெற்றுள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் 105 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. இடதுசாரி கட்சி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. அந்த கட்சி ஒரு தொகுதியில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திரிணாமுல் காங்கிரசுக்கு எதிராக மக்களின் மனநிலை இருப்பதையே இந்த தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

# மதுரை தெற்கு தொகுதி: தவெக வேட்பாளர் கோபிசன் வெற்றி



தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றது. பல்வேறு தொகுதிகளில் வெற்றி விவரங்கள் தெரியத்தொடங்கியுள்ளது. அந்த வகையில், மதுரை தெற்கு தொகுதியில் தவெக வெற்றி பெற்றுள்ளது. தவெக வேட்பாளர் கோபிசன் 58,598 வாக்குகள் பெற்று வென்றுள்ளார்.

திமுக சார்பாக போட்டியிட்ட பூமிநாதன் 38,542வாக்குகள்பெற்றுஇரண்டாம்இடத்தில் உள்ளார். பாஜக சார்பாக போட்டியிட்ட ராம சீனிவாசன் 29,489 வாக்குகளும், நாம் தமிழர் கட்சியின் சுமதி 5,497 வாக்குகளும் பெற்றுள்ளனர். தவெக தொடர்ந்து பல்வேறு தொகுதிகளிலும் முன்னிலை வகித்து வருகிறது.தற்போதயநிலவரப்படிதவெக110இடங்களிலும்திமுக65இடங்களிலும் அதிமுக 59 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

# சமூக வலைதளங்களில் வைரலாகும் கருணாநிதியின் பொன்மொழி




தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுகளில் யாரும் எதிர்பாராத வகையில் நடிகர் விஜயின் தவெக 111 க்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. அதிமுக 63 இடங்களிலும் முன்னிலையிலும், திமுக கூட்டணி 60 இடங்களில் முன்னிலையில் உள்ளது. நடிகர் விஜய் முதல்-அமைச்சராக பொறுப்பேற்க வாய்ப்பு இருப்பதாக அரசியல் வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த சூழலில் திமுக கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வந்தது. குறிப்பாக பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை வழங்கியது. இதேபோன்று மகளிருக்கு விடியல் பயணம் என்று நகரப் பேருந்துகளில் இலவச பயணங்களை மகளிர் மேற்கொண்டனர்.

இதே போன்று தமிழ் புதல்வன், தாயுமானவன் திட்டம், இல்லம் தேடி கல்வி போன்ற பல்வேறு திட்டங்களை திமுக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்டது. இதன் காரணமாக திமுக இந்தமுறை வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தமிழக மக்கள் விஜய் கட்சிக்கு வாக்களித்து இருப்பது தெள்ளத் தெளிவாக இருக்கிறது.

இந்த சூழலில் தான் கலைஞர் கருணாநிதி சொன்ன வார்த்தைகள் தற்போது சமூகவலைத்தளத்தில்வைரலாகிவருகிறது.அதில்செய்தியாளர்கள்கலைஞரிடம் இத்தனை வருட தேர்தல் வாழ்க்கையில் நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று கேட்டனர்.அதற்குபதில்அளித்த முன்னாள் முதல்-அமைச்சர் கருணாநிதி, நம்மால் பயனடைந்தவர்கள் நம்மிடம் நன்றி காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. மக்களுக்கு நல்லது செய்ய நமக்கு கிடைத்த வாய்ப்பாக மட்டும் தான் என் அரசியல் வாழ்வை பார்க்கிறேன் என்று கூறியிருந்தார். தற்போது கலைஞரின் இந்த பொன்மொழி சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. திமுக ஆட்சியில் பல நலத்திட்ட உதவிகள் மேற்கொள்ளப்பட்டும், மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளாமல் நடிகர் விஜய்க்கு வாக்களித்து ஒரு மாற்று அரசியல் தமிழகத்தில் வேண்டும் என்று நினைத்து இருப்பதாக அரசியல் வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# ராயபுரம் தொகுதியில் மீண்டும் தோல்வியை தழுவிய ஜெயக்குமார்



சென்னையில்உள்ளதொகுதிகளில் மிக முக்கியமானதாக திகழக்கூடியது ராயபுரம். கடலோர பகுதியில் அமைந்து உள்ள இங்கு கடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றிக்கொடி நாட்டியது. இந்த முறை திமுக, அதிமுக, நாதக, தவெக, தமிழக வாழ்வுரிமை கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவை போட்டியில் உள்ளனர். இது தவிர சுயேச்சைகள் பலரும் போட்டியிட கிட்டத்தட்ட ராயபுரம் தொகுதியில் 28 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். ராயபுரம் தொகுதியில் மறைந்த முன்னாள் அமைச்சர் ரகுமான் கானின் மகன் சுபேர்கான் திமுக வேட்பாளராக களமிறங்கினார். கடந்த ஐந்து ஆண்டுகளாக திமுக கொண்டு வந்த திட்டங்களை மக்களிடம் பிரசாரம் செய்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார். மருத்துவரான இவருக்கு அந்த தொகுதியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட திட்டங்களை சொல்லி, பெண்களிடம் தீவிரமாக பிரசாரம் செய்தார் சுபேர்கான்.


# தேர்தல் முடிவுகள் பெருமகிழ்ச்சி அளிக்கிறது விஜயின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் பேட்டி




தமிழகத்தில் 234 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்.23-ம் தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. அதில் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின. தேர்தலில் பதிவான வாக்குகள் 8 மணி முதல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. வாக்குஎண்ணிக்கை தொடங்கியது முதல் தவெக 104 தொகுதிகளுக்கு மேல் முன்னிலையில் உள்ளது. தவெக தலைவர் விஜய் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளார். இந்தநிலையில் விஜயின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் ஏ.என்.ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், தேர்தல் முடிவுகள் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. கூட்டணி இல்லாவிட்டாலும் தேர்தலை சந்திக்கும் தைரியம் விஜயிடம் இருந்தது. தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற விஜய்யின் தன்னம்பிக்கை வியப்பு அளிக்கிறது.

தவெக 100 சதவீதம் வெற்றி பெறும் என 100 சதவீதம் விஜய் நம்பினார். விஜய் பெற்றுள்ள வெற்றியை ஒரு தந்தையாக பெருமை கொள்கிறேன். விஜய் பெற்றுள்ள வெற்றி வரலாற்று சிறப்பு மிக்கது. விஜய்யை முதல்வராக தேர்ந்தெடுத்துள்ளீர்கள்., உங்கள் கனவை விஜய் நிறைவேற்றுவார். அவரை தலைவராக மக்கள் பார்க்கவில்லை., தங்களில் ஒருவராக பார்த்தனர் என்றார்.

# கூடலூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திராவிட மணி வெற்றி




தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பல்வேறு தொகுதிகளில் வெற்றி விவரங்கள் தெரியத் தொடங்கியுள்ளது. அந்த வகையில், நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் திமுக வேட்பாளர் திராவிட மணி வெற்றி பெற்றுள்ளார்.

திராவிட மணி 65,590 வாக்குகளை பெற்று 22,833 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அதிமுக வேட்பாளர் பொன்.ஜெயசீலன் 42,757 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார். தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தீபக்சாய்கிஷோர் 34,962 வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார்.

தவெக தொடர்ந்து பல்வேறு தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. தற்போதய நிலவரப்படி தவெக 111 இடங்களிலும், திமுக 66 இடங்களிலும், அதிமுக 57 இடங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

# Prashant Kishor's old prediction on Vijay resurfaces as TVK surges in Tamil Nadu:'Keep the video, play it after results'



*As counting trends in Tamil Nadu begin to take shape, an old political remark is making the rounds on social media. A statement made months ago by political strategist-turned-politician Prashant Kishor about actor-turned-politician Vijay is now being widely circulated, with many pointing to how closely it aligns with the current trajectory of the Tamilaga Vettri Kazhagam (TVK). Not too long ago, the idea of TVK emerging as a dominant force in Tamil Nadu politics was met with disbelief. When the Axis My India exit poll projected that the party could secure anywhere between 98 and 120 seats, the prediction drew ridicule among several people.*

*Interestingly, this isn't the first time such confidence in TVK's prospects has been expressed. More than a year before the elections, during a television interview, Prashant Kishor had already articulated a similar view about Vijay's political chances. Speaking to Thanthi TV in March last year, Kishor was asked about the party's future and whether alliances might shape its path. His response was unequivocal. "The commitment is to go alone, absolutely. I don't see that changing. Keep this video, play it when results are out," he said.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.